# நிமித்தம் நாவலில் மெய்ப்பாடு

ரா.சத்தியசீலா[1] மற்றும் முனைவர் அ.வளர்மதி[2]

[1]முனைவர் பட்ட ஆய்வாளர், ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி (த), மதுரை-2

[2]உதவிப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,

ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி (த), மதுரை-2

---

**முன்னுரை**

பண்டையத் தமிழ் இலக்கண நூல்களில் முதன்மை வாய்ந்த நூலாகச் சான்றோர்களால் வழங்கப் பெறும் இயல்பினை உடையது ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியரால் அளிக்கப் பெற்றத் தொல்காப்பியம் ஆகும். எழுத்து, சொல், பொருள் என்னும் முப்பெரும் அதிகாரங்களைக் கொண்டும், அதிகாரத்திற்கு ஒன்பது இயல்களைக் கொண்டும் விளங்குகின்றது. நாடக வழக்கினுக்கும், உலகியல் வழக்கினுக்கும் செய்யுளியல் வழக்கினும் உயிரோட்டமான உணர்வுக்கு வடிவம் தருவது மெய்ப்பாட்டியல் எனும் உணர்வாகும். இவ்இயலில் மனிதர்கள் அனைவருக்கும் பொதுவாகக் காணப்படும் இன்ப துன்ப உணர்வுகளை நிமித்தம் நாவலில் இடம்பெற்றுள்ள கதைமாந்தர்கள் மூலம் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் எனலாம்.

**தொல்காப்பியம்**

ஒப்பில்லாத தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது, ஒன்பது இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. இதன் வழி பொருளதிகாரம் ஒன்பது இயல்களையும் 665 நூற்பாக்களையும் கொண்டுள்ளது. தொல்காப்பியம் முழுமையும் 1610 நூற்பாக்கள் இடம் பெற்றுள்ளன என்பதனை,

**“பூமலர்மென் கூந்தால் பொருளியலின் சூத்திரங்கள்**
**ஆவ அறு நூற்றுபத் தைந்தாகும் மூவகையால்**
**ஆயிரத்தின் மேலும் அறுநூற்றுப் ப∴தென்ப**
**பாயிரத்தொல் காப்பியங்கற் பார்”** [1]

என்ற வெண்பா மூலம் தொல்காப்பியம் பழம்பெரும் நூல் என்பதையும் அதன் அமைப்பு முறையையும் நம்மால் அறிய முடிகிறது.

**பொருளதிகாரம்**

உலகத்தில் காணப்படும் பொருள்களை எல்லாம் காட்சிப் பொருள், கருத்துப் பொருள் என இருவகைப்படுத்துவர். அவற்றை எல்லாம் வாழ்வியல் முறைக்கு ஏற்ப முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என முப்பொருளாகக் கொண்டது, தொல்காப்பியரின் பொருளதிகாரம் ஆகும். இதனை ந.சுப்புரெட்டியார் தனது நூலில்

**“ஈட்டும் அகத்திணையும் ஏய்ந்த புறத்திணையும்**
**காட்டும் களவியலும் கற்பியலும் மீட்டும்**

**பொருளியல் மெய்ப்பாடுஉவமம் போற்றிய செய்யுள்**

**மரபியலும் ஆம் பொருளின் வைப்பு”[2]**

என்ற வெண்பா மூலம் பொருளதிகார இயல்கள் ஒன்பது என்பதை நிரூபிக்கிறார்.

**தொல்காப்பித்தில் மெய்ப்பாடு**

ஒருவரின் உள்ளத்தில் நிகழும் நிகழ்ச்சிகள் அங்கு நிகழ்ந்தவாறே பக்கத்தில் உள்ளார் அறியும்படி உடம்பின் வழிப் புலப்படுத்திக் காட்டுவதே மெய்ப்பாடாகும். மெய்ப்பாட்டின் இயல்பினைத் தொல்காப்பியர் மெய்ப்பாட்டியல் எனும் அதிகாரத்தின் வழி எடுத்துரைக்கிறார். மெய்ப்பாடு என்பது செய்யுள் உறுப்புகளில் ஒன்றாகி, பாடலின் பொருளை உணர்த்துவதாகத் தொல்காப்பியர் கூறியுள்ளார். இந்த மெய்ப்பாடுகள் எட்டும் மனித வாழ்க்கையோடு தொடர்புடையனவாக உள்ளன. ஆதிமனிதன் தன் உணர்வை சைகைகளால் வெளிப்படுத்தினான். நாகரிகம் வளர வளர எழுத்து, பேச்சு ஆகிய இரண்டும் தோன்றின. மனிதன் தன் உணர்வுகளை ஐம்பொறிகளாலும், உடலசைவுகளாலும் வெளிப்படுத்திய நிலை மறைந்தது எனலாம்.

**மெய்ப்பாடு சொற்பொருள் விளக்கம்**

மெய்ப்பாடு என்ற சொல்லிற்குரிய பொருளைத் தொல்காப்பியம் பின்வருமாறு விளங்குகிறது. ‘மெய்ப்பாடு என்பது மெய்ப்படு’ என்பதின் திரிந்த வடிவமாகும். ‘படு’ எனும் தொழிற்பெயரானது நீண்டு ‘பாடு’ எனும் முதனிலைத் திரிந்த தொழிற்பெயராக அமைந்துள்ளது.

**மெய் - பாடு – மெய்ப்பாடு**

**மெய் - உடம்பு**

**பாடு – தோன்றுதல்**

இவ்வாறு மெய்யாகிய உடம்பின் கண் தோன்றுதலின் மெய்ப்பாடாயிற்று என்று கூறுதல் மரபாகும். இது சைகை மொழி, நாட்டியத்தின் அவிநயம், நாடகத்தின் நடிப்புக்கலை என்றெல்லாம் கூறப்படுகின்றன. இம்மெய்ப்பாடு இரதம், இரசம், சுவை ஆகிய பெயர்களால் இலக்கண நூல்களில் சுட்டப்பட்டுள்ளன.

**மெய்ப்பாடு பற்றிய இலக்கண நூல்களின் கருத்துக்கள்**

தொல்காப்பியத்திற்குப் பின் வந்த முதல் அணி இலக்கண நூல் தண்டியலங்காரம். இது செய்யுளுக்குரிய இன்றியமையாத உறுப்பான முப்பத்தைந்து அணிகள் பற்றிக் குறிப்பிடுகின்றது. அம்முப்பத்தைந்து அணிகளின் வரிசையில் ஒன்றான சுவையை மெய்ப்பாடு என்று தண்டியலங்கார ஆசிரியர் குறிப்பிடுகின்றார். சான்றாக,

**“உண்ணிகழ் தன்மை புறத்துத் தோன்ற**
**எண்வகை மெய்ப்பாட்டின் இயல்வது சுவையே**
**அவைதாம்**
**வீரம் அச்சம் இழிப்பொடு வியப்பே**
**காமம் அவலம் உருத்திரம் நகையே”[3]**

என்றும்

**“திணையே கைக்கோள் கூற்றே கேட்போர்**
**இடனே காலம் பயனே முன்னம்**
**மெய்ப்பாடு எச்சம் பொருள்வகை என்று**
**அப்பால் ஆறிரண்டு அகப்பாட் டுறுப்பே**
**நகை முதலாம் இருநான்கு மெய்ப்பாடும்**
**நிகழ்பொருள் மெய்ப்பட நிற்பது மெய்ப்பாடே”**[4]

என்றும் முறையே தண்டியலங்காரமும் நம்பியகப்பொருளும் மெய்ப்பாடு என்பதன் விளக்கத்தையும் வகைகளையும் குறிப்பிடுகின்றன. ஆனால் தண்டியலங்காரம் வெகுளி என்பதை ‘உருத்திரம்’ என்ற சொல்லால் குறிக்கப்படுவதைக் காணலாம். மேலும் நம்பியகப்பொருள் தொல்காப்பியரை ஒருபடி விஞ்சி பனிரெண்டு என்று குறிப்பிடுகிறது.

**தொல்காப்பியர் கூறும் மெய்ப்பாட்டு உணர்வுகள்**

ஒருவரின் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை அவர் புறத்தே வெளிப்படுத்தினாலும் அவ்உணர்வை அனைவரும் உணர்ந்து கொள்வதில்லை. அவ்வாறு உணரும் தன்மை உடையவர்கள் யார் என்பதைத் தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலின் இறுதி நூற்பாவில் கூறியுள்ளார்.

**“கண்ணினும் செவியினுந் திண்ணிதின் உணரும்**
**உணர்வுடை மாந்தர்க்கு அல்லது தெரியின்**
**நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே”**[5]

என்ற நூற்பாவானது மனிதர்களால் கண்ணாலும், செவியாலும் நுட்பமாக உணரக் கூடிய உணர்வுகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார். தொல்காப்பியர் உலக வழக்கு, நாடக வழக்கு எனும் இருவகை வழக்குகளில் மெய்ப்பாடு உலக வழக்கில் இருந்து தோன்றியதாகக் கூறுகிறார். இவ்வழக்கானது இலக்கிய வகைகளில் ஒன்றான நாடகத்திலும் இடம்பெற்றுள்ளதை,

**“பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்**
**கண்ணிய புறனே நானான் கென்ப”**[6]

எனும் நூற்பாவின் வழியே அறிய முடிகிறது.

**எண்வகை மெய்ப்பாடுகள்**

உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிக்கு ஏற்ப உடலில் தோன்றும் வேறுபாடாகிய மெய்ப்பாட்டினைத் தொல்காப்பியர் எட்டு வகையாகக் கூறியுள்ளார்.

**“நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று**
**அப்பா லெட்டே மெய்ப்பா டென்ப”**[7]

நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை ஆகிய எண்வகை உணர்வுகளே மெய்ப்பாடாகும். ஒவ்வொன்றும் நான்கு நிலைக்களன்களை அடிப்படையாகக் கொண்டு முப்பத்திரண்டு நிலைக்களன்களைக் கொண்டுள்ளது என்று

தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் விளக்குகிறார்.

**எஸ்.ராமகிருஷ்ணன் நிமித்தம் நாவலில் காணப்படும் மெய்ப்பாட்டு உணர்வுகள்**

நிமித்தம் நாவல் வாழ்வில் புறக்கணிக்கப்பட்டவர்களின் நினைவுகளின் வழியே காது கேளாதவர்களின் துயரைப் பகிர்ந்து கொள்ள முடியும் என்பதை விளக்குகிறது. இக்கதையில் தேவராஜ் என்பவனின் பண்பினையே மையமாகக் கொண்டு கதை அமைகிறது. இது தேவராஜின் கதை மட்டுமில்லை, அவனைப்போல உடற்குறைபாடு கொண்ட பலரையும் இந்தச் சமூகம் எப்படி நடத்துகிறது என்ற அவலத்தின் வெளிப்பாட்டை புறக்கணிப்பிற்கும், அன்பிற்குமான இடையறாத ஏக்கத்திற்கும் உள்ளான ஒரு மனிதனின் வாழ்க்கையை இந்நாவல் பேசுகிறது.

**நகை**

தொல்காப்பியர் கூறும் எண்வகை மெய்ப்பாடுகளுள் முதலாவதாக இடம் பெற்றுள்ளது நகை மெய்ப்பாடாகும். நகை என்பது சிரிப்பு, அது முறுவலித்து நகுதலும், அளவோடு நகுதலும், பெருகச் சிரித்தலும் என்று மூன்று வகைப்படும். இதனை,

**“நகையெனப் படுதல் வகையா தெனின்**
**நகையெனச் செய்வோன் செய்வகை நோக்கு**
**நகையொடு நல்லவை நனிமகிழ் வதுவே”**[8]

என்ற பாடலானது எடுத்துக்காட்டுகின்றது. நகை மூன்று வகையாகப் பிரித்தாலும் அவை தோன்றும் இடங்கள் பலவாகும். இதனை,

**“எள்ளல் இளமை பேதமை மடனென்று**
**உள்ளப் பட்ட நகைநான் கென்ப”**[9]

எனும் நான்கு நிலைக்களன்களாகத் தொல்காப்பியர் வகைப்படுத்தியுள்ளார். நிமித்தம் நாவலில் தேவராஜ் என்பவரின் செவிக்குறைபாட்டு இயலாமையைக் கூறி அனைவரும் எள்ளி நகையாடுவர். சான்றாக, தேவராஜ் பள்ளி ஆசிரியரின் கேலிக்கு ஆளாகிறான் அப்பொழுது அதனைக் கேட்ட சக தோழர்கள் நகைக்கின்றனர். **“அங்கே யாராவது அவுத்துப் போட்டு ஆடுறாங்களா, என்னடா அங்கே பார்த்துகிட்டு இருக்கே என ஜான்சன் சார் ஒரு நாள் டஸ்டரைத் தூக்கி முகத்தோடு அடித்தார். முகத்தில் சாக்பீஸ் மாவு ஒட்டிக் கொண்டது. மாணவர்கள் ஆரவாரமாகச் சிரித்தார்கள்”**[10] எனும் பொழுது ஆசிரியரின் வெறிச்செயலும், மாணவர்களின் கேலியும் இப்பகுதியில் நகை உணர்வில் எள்ளல் சுவையாக வெளிப்படுகிறது.

**அழுகை**

தொல்காப்பியர் குறிப்பிடும் எண்வகை மெய்ப்பாடுகளில் அழுகை இரண்டாவதாக இடம்பெற்றுள்ளது. இது சிரிப்புக்கு மாறுபட்டதாகி வருவதால் இரண்டாவதாக வைக்கப்பட்டுள்ளது.

**“இழிவே இழவே அசைவே வறுமையென**
**விளிவில் கொள்கை அழுகை நான்கே”**[11]

என்ற நான்கு நிலைக்களன்களின் அடிப்படையாகக் கொண்டு அழுகை மெய்ப்பாடு

தோன்றுகின்றது. நிமித்தம் நாவலில் ஒவ்வொரு நிலையிலும் தேவராஜ் தனது குறைபாட்டினால் அவமானங்களைச் சந்திக்கிறான். வேதனை அடைகிறான். அவமானமும், வேதனையும் அழுகை என்ற மெய்ப்பாடாக வெளிப்படுகிறது. 'பிறர் கூறும் இழிவான வார்த்தைகளால் தன் நிலையில் இருந்து தாழ்ந்த நிலையை அடைதல் இழிவு ஆகும்' என்பதை இந்நாவல் பல இடங்களில் வெளிப்படுத்துகிறது. சான்றாக, வகுப்பின் ஆசிரியர் ஒருமுறை, **"காது கேட்காத முண்டம், உனக்கு எல்லாம் எதுக்குப் படிப்பு? பேசாமல் எருமை மாடு மேய்க்கப் போக வேண்டியது தானே, இங்கே வந்து ஏண்டா உசிரை வாங்குறே என்று சொல்லி சொல்லி ரசாக் சார் அடிப்பார்."**[12] என்று கூறும் பொழுது செவிக்குறைபாட்டினால் ஏற்படும் இழிவுச் சுவையால் தேவராஜிற்கு அழுகை தோன்றும் என்பது ஆசிரியர் எஸ்.ராமகிருஷ்ணன் கூறாமலே நமக்கு நன்கு விளங்கும். இதுமட்டுமல்லாமல், இழிவுப்படுத்தப்படுவதால் தேவராஜின் பள்ளிப் படிப்பு தொடர முடியாமல் போய் விடுகிறது என்பதையும் இந்நாவல் இழிவுச் சுவை வழி நமக்கு உணர்த்துகிறது.

**இளிவரல்**

தொல்காப்பியர் சுட்டும் எண்வகை மெய்ப்பாடுகளுள் மூன்றாவதாக இடம் பெறுவது இளிவரல் ஆகும். அழுகை போன்ற இயைபு உடையதால் இளிவரல் அழுகைக்கு அடுத்து இடம் பெற்றுள்ளது.

**"மூப்பே பிணியே வருத்தம் மென்மையொடு**
**யாப்புற வந்த இளிவரல் நான்கே"**[13]

என்றுரைக்கிறார் தொல்காப்பியர். தேவராஜ் தனது உடல் குறைப்பாட்டை எண்ணி இடைவிடாத மனவருத்தத்துடன் காணப்படுகிறான். **"காதைப் பார்க்கும் போதெல்லாம் மனது அவமானத்தில் குறுகி போய்விடும். எப்போது யார் தன்னைக் கேலி செய்வார் எனத் தெரியாத பதற்றத்துடனே மற்றவருடன் பழக நேரிடும்"**[14] எனும் பொழுது காது கேட்காமல் போனதால் ஏற்பட்ட அவமதிப்புகள், புண்படுத்தும் பலரது கேலி மற்றும் மீளமுடியாத தாழ்வுணர்ச்சி அவனுக்குள் தீவிரமான மனப்பாதிப்பினை உருவாக்கியது. இதிலிருந்து பிறருடைய கேலி கிண்டல்கள் உளவியல் சார்பாக நமது மனதைப் பாதிக்கும் என்பதனைத் தேவராஜ் பாத்திரத்தின் வழி உணர முடிகிறது.

**மருட்கை**

மருட்கை என்பதற்கு **'வியப்பு'** என்று பொருள். புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் என்ற நான்கு உணர்ச்சிகளின் அடிப்படையாக மருட்கை சுவை தோன்றும் என்பதைத் தொல்காப்பியர்,

**"புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு**
**மதிமை சாலா மருட்கை நான்கே"**[15]

என்ற நூற்பாவின் மூலம் குறிப்பிடுகிறார். புதுமை எனும் நிலைகளன் மருட்கை மெய்ப்பாடு தோன்றுவதற்குரிய முதன்மை நிலைக்களனாக இடம் பெற்றுள்ளது. புதுமை என்பது முன்பு கேள்விப்பட்டதை கண்டு, கேட்டு, வியக்கும் நிலையாகும். இதனையே, **"ஒரு இடத்தில் மரம்**

**ஒன்று எரிவது போல தெரிந்தது. நன்றாக உற்றுப் பார்க்கையில் ஆற்றின் மறுகரையிலிருந்த ஒரு மரத்திலிருந்து நெருப்பு போல வெளிச்சம் பீறிட்டுக் கொண்டிருந்தது"**[16] என்று உணர்கிறான். அப்பொழுது அவன் அதாவது தேவராஜ் தூரத்தே ஆற்றின் கரையில் மரம் ஒன்று எரிவது போல உணர்கிறான். அவனை அந்தக் காட்சி வசீகரப்படுத்தியது. என்ன விநோதமிது? முழுமையாக ஆறு இருட்டாக ஓடும் போது ஒரு மரத்தில் மட்டும் ஏன் ஒளி சுழல்கிறது என்று எண்ணி ஒரு வேளை அந்த மரத்தின் இலைகளில் ஏதாவது, ஒளி உமிழும் திரவம் வடிகிறதா? என்று உள்ளத்தே ஒரு புதுமை சிந்தனையை எண்ணி மருட்கை கொள்கிறான். இதன் மூலம் எங்கும் காணதா ஒன்றைக் காணுதல் மருட்கை என்னும் மெய்ப்பாடாகும் என்பதை இப்பகுதி மூலம் நம்மால் அறிய முடிகிறது.

**அச்சம்**

அச்சம் என்னும் மெய்ப்பாடு பொதுவாக வாழ்வின் நலத்திற்கும், முன்னேற்றத்திற்கும் தடையானதாகும். இம்மெய்ப்பாடு இல்லாத உயிரே உலகத்தில் இல்லை என்று கூறலாம். ஒவ்வோர் உயிரும் அச்சங் கொண்டுதான் வாழ்கின்றது. அச்சம் மிகுதியாகின்ற போது உயிர்கட்கு அழிவும் ஏற்பட்டு விடுகின்றது.

**"அணங்கே விலங்கே கள்வர் தம்மி றையெனப்**
**பிணங்கல் சாலா அச்சம் நான்கே"**[17]

என்ற நூற்பாவில் அச்சம் என்ற மெய்ப்பாட்டின் நிலைக்களன்களாகத் தொல்காப்பியர் மேற்கூறிய நூற்பாவின் வழிக் குறிப்பிடுகிறார்.

**"காது கேட்காமல் போன பத்து வயதில் வீதியில் நடக்கவே பயமாக இருக்கும். எங்கே ஏதாவது ஒரு பேருந்து பின்னால் வந்து அடித்துப் போட்டு விடுமோ, பைக் ஓட்டுபவர்கள் தள்ளிவிடுவார்களோ என அச்சத்தோடு தான் நடந்து போவான்"**[18] என தேவராஜின் அடிக்கடி பய உணர்வுடனேயே நடந்து செல்வான் என்பதை எஸ்.ராமகிருஷ்ணன் தேவராஜின் வழி பதிவு செய்கிறார். இவ்விடத்தில் தொல்காப்பியர் கூறிய அச்ச உணர்வினை அறிய முடிகிறது.

**வெகுளி**

வெகுளி எனும் சினம் குறித்து வள்ளுவர்,

**"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"**[19]

என்ற குறட்பா கோபத்தின் அல்லது சினத்தின் தன்மையை 'நாவு' என்ற உறுப்பின் மூலமாக வெளிப்படுத்துகிறார். வெகுளி என்பது சின உணர்ச்சிக் கண் பிறப்பதாகும். இவ்உணர்வு உறுப்பறை, குடிகோள், அலை, கொலை என்ற நான்கின் பொருண்மையில் தோன்றும் என்பதை,

**"உறுப்பறை குடிகோள் அலைகொலை என்றன**
**வெறுப்ப வந்த வெகுளி நான்கே"**[20]

தொல்காப்பிய நூற்பா வெகுளிச் சுவையை நான்கு நிலைக்களன்கள் வழியே விளக்கியுள்ளது. வெகுளி என்னும் சொல் சினம், வெறுப்பு என்ற பொருளைக் குறிப்பிடுகிறது.

**“உபயோகமில்லாத காதுகள் எதற்காக தன் முகத்தோடு ஒட்டிக் கொண்டிருக்கின்றன என்று கண்ணாடி பார்க்கும் போது அவற்றை ஆத்திரத்துடன் பார்த்தபடி இருப்பான். ஓர் இலையைக் கிள்ளி எறிந்து விடுவது போலக் காதை அறுத்துப் போட்டுவிட முடியாதுதானே”**[21] என்று தேவராஜ் தனது கேளாத காதை அறுத்துப் போட்டு விடும் அளவிற்கு கோபம் அவன் கண்ணை மறைத்தது. இதற்குக் காரணம் ஊனமான அவன் காதுகளே என்பதை இப்பகுதியின் வழி உணர முடிகிறது.

**உவகை**

உவகை மெய்ப்பாடு வெகுளி என்ற உணர்வுக்கு மாறுதலாக மகிழ்ச்சியைக் குறிக்கும். செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு என்ற பொருண்மையின் கீழ் தோன்றும் என்பதை,

**“செல்வம் புலனே புணர்வு விளையாட்டு**
**அல்லல் நீத்த உவகை நான்கே”**[22]

என்ற நூற்பாவின் வாயிலாகத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். நிராகரிப்பும் புறக்கணிப்பும் கொண்ட தேவராஜ் வாழ்வில் அன்பும், அக்கறையும் கொண்ட சுதர்சனம் சார் மற்றும் அவரது மனைவியையும் தனது பெற்றோராக எண்ணி மகிழ்ச்சி அடைகிறான். தேவராஜிற்கு தனது பள்ளியில் வேலை பார்க்கும் சுதர்சனம் வாத்தியாரை மிகவும் பிடிக்கும். ஒருமுறை அவரது மனைவி அங்கையர்கண்ணி உடல்நலம் சரியில்லாமல் போய்விட்டது. ‘அவர்களுக்கு தேவராஜ் உதவிய போது அவனது தந்தைக்கு அது பிடிக்கவில்லை. அவர் தேவராஜை அடித்து இழுத்துச் சென்றார். அப்போது அவனுக்கு அவனது தந்தை மீது கோபம் உண்டானது’ என்று கூறும் பொழுது தேவராஜிற்கு தந்தையின் மீது உண்டான வெகுளிச் சுவையை அறிய முடிகிறது. **“சுதர்சனம் சார் தனக்கு அப்பா போலவும் டீச்சர் தனக்கு அம்மா போலவும் கற்பனை செய்து கொண்டான். அந்த கற்பனை மிகுந்த ஆறுதல் தருவதாக இருந்தது.”**[23] என்று தேவராஜ் தன் மனத்தில் அவர்களுக்கு ஓர் உயரிய இடத்தை அளிக்கும் போது மகிழ்ச்சி கொள்கிறான். அத்துடன் தேவராஜிற்கு வயது ஏற ஏறக் காதலும் பிறக்கிறது. அப்பொழுது அவன் மனம் மகிழ்கிறது என்பதை ஆசிரியர் பின்வருமாறு கூறுகிறார். **“யானை நிலம் அதிர நடந்து போவது போலக் காமம் அவனுக்குள் திம்திம்மெனத் தனது காலடிகளை வைத்து அதிரச் செய்து கொண்டிருந்தது.”**[24] என்னும் வரிகள் மூலம் காதல் யானை போல மிகப் பெரிதாக அவனுக்குள் புதைந்து கிடப்பதையும், அதனால் அவன் மகிழ்வதை ஆசிரியர் இப்பகுதியில் விளக்குகிறார். இதுவரை ஊனம் கண்டு உடைந்த அவன் உள்ளம் காதலால் மகிழ்கிறது என்று உவகைச் சுவை கையாளப்படுகிறது. இந்த உவகைச் சுவையே தேவராஜின் உள்ளத்தில் பெருமிதத்தை உண்டு பண்ணும் என்பதை நாம் இதன் மூலம் உணர முடிகிறது.

**முடிவுரை**

நாவலுக்கு உயிரோட்டமாக அமைவது கதைமாந்தர்கள் ஆவர். கதைமாந்தர்கள் இல்லாமல் கதை இயங்காது. நாவல் உணர்வுப்பூர்வமாகவும், உயிரோட்டமாகவும் இருப்பதற்கு முதன்மையாக இருப்பது மெய்ப்பாட்டு உணர்வுகளே ஆகும். மெய்ப்பாடு கதைமாந்தர்

உணர்ச்சிகளின் வெளிப்பாடாக அமைகின்றது என்பதற்கு ஆதாரமாக மெய்ப்பாடு என்றால் என்ன என்பதையும், அந்த மெய்ப்பாடுகள் இடம்பெற்ற தொல்காப்பியம், நம்பியகப்பொருள், தண்டியலங்காரம் ஆகிய நூல்களின் வழி விளக்கப்பட்டுள்ளது. மேலும் நிமித்தம் நாவலில் தேவராஜின் வாழ்வில் ஏற்பட்ட அவமானங்களும், மனவேதனைகளும் எண்வகை மெய்ப்பாட்டினை ஒப்பிட்டு விளக்கப்பட்டுள்ளது.

**அடிக்குறிப்புகள்**

1. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியர் காட்டும் வாழ்க்கை ப – 37
2. மேலது ப – 37
3. தண்டியலங்காரம், பக் - 68 – 69
4. நம்பியகப்பொருள் பக் - 230 – 231
5. ச.திருஞானசம்பந்தம், தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும் ப – 241
6. மேலது ப – 221
7. மேலது ப – 223
8. ச.வே.சுப்பிரமணியம், தமிழ் இலக்கணநூல் ப – 252
9. ச.திருஞானசம்பந்தம், தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும் ப – 223
10. எஸ்.ராமகிருஷ்ணன், நிமித்தம் ப - 19
11. ச.திருஞானசம்பந்தம், தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும் ப – 224
12. எஸ்.ராமகிருஷ்ணன், நிமித்தம் பக் - 19 - 20
13. ச.திருஞானசம்பந்தம், தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும் ப – 225
14. எஸ்.ராமகிருஷ்ணன், நிமித்தம் ப - 24
15. ச.திருஞானசம்பந்தம், தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும் ப – 225
16. எஸ்.ராமகிருஷ்ணன், நிமித்தம் ப - 321
17. ச.திருஞானசம்பந்தம், தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும் ப – 226
18. எஸ்.ராமகிருஷ்ணன், நிமித்தம் ப – 18
19. திருக்குறள், குறள் - 127
20. ச.திருஞானசம்பந்தம், தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும் ப – 227
21. எஸ்.ராமகிருஷ்ணன், நிமித்தம் ப – 24
22. ச.திருஞானசம்பந்தம், தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும் ப – 227
23. எஸ்.ராமகிருஷ்ணன், நிமித்தம் ப – 141
24. மேலது ப - 268

**துணைநூற்பட்டியல்**

1..ந.சுப்புரெட்டியார் தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை
பழனியப்பா பிரதர்ஸ்
சென்னை 1974

2 .ச.வே.சுப்பிரமணியம் தமிழ் இலக்கணநூல்
பவானந்தர் கழக வெளியீடு
1942

3. தி.வே.கோபாலையர் இலக்கணவிளக்கம்
தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு
1973

4 .ச.திருஞானசம்பந்தம் தொல்காப்பியம் பொருளதிகாரம்
கதிர் பதிப்பகம்

5. எஸ்.ராமகிரு‘ணன் நிமித்தம்
தேசாந்திரி பதிப்பகம்
2018